# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590


**ஆணை நாள் - 11.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். CP 580/SCIC/2020

திரு.C.முருகேசன்
77-A, கல்லுவிளை — புகார்தாரர்
காரங்காடு போஸ்ட்
கன்னியாகுமரி மாவட்டம்.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர் (நிர்வாகம்) ....... பொதுஅதிகார அமைப்பு
சார் பதிவாளர் அலுவலகம்
இரணியல் - 629 802.

### ஆணை

இவ்வழக்கின் விசாரணை ஏற்கனவே 11/03/2024 அன்று ஆணையத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> **இவ்வாணை கிடைக்கப் பெற்ற 5 வேலை தினங்களுக்குள் மனுதாரரின் 24/08/2020 தேதியிட்ட தகவல் கோரும் மனுவில் அவர் கோரிய இனம் 2-ல் ஆவணங்களை பதிவு செய்த சார்பதிவாளரின் பெயர் மற்றும் தற்போதைய பதவி போன்ற தகவல்களை மனுதாரருக்கு எவ்விதக் கட்டணமுமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பிவிட்டு, அது குறித்த அறிக்கையினை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**
>
> **இருப்பினும் 24/08/2020 தேதியிட்ட தகவல் கோரும் மனுவினை தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(3)-ன் கீழ் 5 தினங்களுக்குள் மாற்றம் செய்யாதற்காக அப்போதைய மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்) திரு.ஸ்வீட்லின் பிளாரன்ஸ், கன்னியாகுமரி (இ) நாகர்கோவில் அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான**

**காரண விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலமாக இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்படுகிறது. மேற்சொன்ன அப்போதைய மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்) திரு.ஸ்வீட்லின் பிளாரன்ஸ், கன்னியாகுமரி (இ) நாகர்கோவில் அலுவலரிடமிருந்து காரண விளக்கத்தினைப் பெற்று இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பணிக்கப்படுகிறார்.**

2. **மேற்குறிப்பிட்டவாறு திரு.K.ஸ்வீட்லின் பிளாரன்ஸ், முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), கன்னியாகுமரி (இ) நாகர்கோவில் (இ) கன்னியாகுமரி அவர்கள் 10/06/2024 தேதியிட்டு தனது காரண விளக்கத்தை ஆணையத்தின் முன் சமர்ப்பித்துள்ளார். அதில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

"திரு.C.முருகேசன், 77 கல்லுவிளை, காரங்காடு போஸ்ட், கன்னியாகுமரி மாவட்டம் என்பவரின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழான மனு கன்னியாகுமரி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 25.08.2020 அன்று பெறப்பட்டுள்ளது. நான் அப்போது கன்னியாகுமரி பதிவு மாவட்ட தணிக்கை மாவட்டப் பதிவாளராக பணிபுரிந்து வந்தேன். நிர்வாக மாவட்டப் பதிவாளராக பணிபுரிந்த மாவட்டப் பதிவாளர் 17.08.2020 அன்று விருப்ப ஓய்வில் சென்றதால் அந்தப் பொறுப்பினையும் தணிக்கை மாவட்டப் பதிவாளராக இருந்த நான் கூடுதல் பொறுப்பில் கவனித்து வந்தேன்.

மேற்கண்ட மனு பெறப்பட்டதற்கு அடுத்த நாள் 26.08.2020 முதல் 29.08.2020 வரை நான் இரணியல் சார்பதிவாளர் அலுவலகத்தில் தணிக்கைப் பணி மேற்கொண்டிருந்த போது இந்த மனு தொடர்பாக பிரிவு எழுத்தர் எனக்கு கைபேசியில் தெரிவித்தார். மேலும் வாட்ஸ்அப் மூலமாகவும் அனுப்பினார். **கொரானா தொற்று பரவி வந்த காலம் என்பதால் இரணியில் சார்பதிவாளருக்கு இதனை நேரில் தெரிவித்து உரிய காலக்கெடுவுக்குள் தகவல் வழங்குமாறு தெரிவித்தேன்.** அதன் பின்னர், கொட்டாரம், தக்கலை, தோவாளை, பூதப்பாண்டி, வடசேரி ஆகிய சார்பதிவாளர் அலுவலகங்களில் ஆய்வு பணியில் மேற்கொண்டு இருந்ததால், இந்த மனு தொடர்பான கோப்பினை பணியில் மிகவும் இளையவரான பிரிவு எழுத்தர் 14.09.2020 அன்று பார்வைக்கு வைத்ததால், எனது பணியுடன் கூடுதலாக நிர்வாக பிரிவு பணியினையும் கவனித்ததால் அதில் 14.09.2020 தேதியிட்டு கையெழுத்திட நேர்ந்தது. எனினும் மனுதாரருக்கு பொதுத் தகவல் அலுவலரான இரணியில் சார்பதிவாளரால் உரிய காலக்கெடுவுக்குள் அதாவது 28.09.2020 அன்று கடிதம் எண்.270/2020-ன்படி தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், மனுதாரரின் மேல்முறையீட்டின் மேல் முறையீட்டின் மேல் தகவல் ஆணையத்தின் உத்தரவின் பேரில், மேல்முறையீட்டு அலுவலரால் 26.02.2022 தேதியிலும், பொதுத் தகவல் அலுவலரால் கட்டணம் ஏதும் வசூலிக்காமல் 06.05.2024 அன்றும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. நான் கூடுதல் பொறுப்பில் பணிபுரிந்தததால், பணிப்பளுவின் காரணமாகவும், **கொரானா தொற்று பரவி வந்த காலம் என்பதால்**, தகவல் அளிப்பதில் காலதாமதம் ஆகிவிடாமல் பொதுத் தகவல் அலுவலருக்கு நேரில் விபரத்தை தெரிவித்து உரிய காலக்கெடுவுக்குள் தகவல்கள் வழங்கப்பட்டு விட்டதையும் கனிவுடன் பரிசீலித்து என் மீதான நடவடிக்கையை கைவிட வேண்டுமாறு மிகவும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன். "

**3. மேற்கண்ட காரண விளக்கத்தை ஆணையம் பரிசீலனை செய்கையில், அதனை பதிவு செய்து, ஏற்கிறது. பொதுத் தகவல் அலுவலர் மீதான ஆணையத்தின் மேல்நடவடிக்கை கைவிடப்படுகிறது. எனவே, புகார் மனு மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 580/SCIC/2020</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1.திரு.K.ஸ்வீட்லின் பிளாரன்ஸ்
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
கன்னியாகுமரி (இ) நாகர்கோவில்.

2.பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர் (நிர்வாகம்)
சார் பதிவாளர் அலுவலகம்
இரணியல் - 629 802.

**புகார்தாரர்**

திரு.C.முருகேசன்
77-A, கல்லுவிளை
காரங்காடு போஸ்ட்
கன்னியாகுமரி மாவட்டம்.

நகல்
பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை-600 028.

RG/PC